# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2018

பதிவு எண் : | | | | | | |

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி

மதிப்பெண்கள்: 90

## கணக்குப்பதிவியல்

### பிரிவு - I

20 x 1 = 20

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட மூன்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. முதல் மீதான வட்டி கூட்டப்படுவது a) செலவுடன் b) வருவாயுடன் c) முதலுடன்
2. பற்பல கடனாளியிடமிருந்து திரும்பப் பெற இயலாத கடன்
   a) வாராக்கடன் b) வாரா ஐயக்கடன் c) திரும்பப் பெற்ற வாராக் கடன்
3. முதலினைக் கணக்கிடும் அறிக்கை, இருப்புநிலைக் குறிப்பு போன்று தோற்றமளிக்கும்.
   a) இலாப அல்லது நட்ட அறிக்கை b) நிலையறிக்கை c) இருப்புநிலைக்குறிப்பு
4. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்துவோர் a) சிறு வியாபாரிகள் b) நிறுமங்கள் c) அரசு
5. உரிமையாளரின் மொத்தச் சொத்துக்கள் ரூ.5,00,000. அவருடைய பொறுப்புகள் ரூ.2,85,000. அவருடைய முதல் ________ ஆகும். a) ரூ.7,85,000 b) ரூ.2,15,000 c) ரூ.1,25,000
6. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்தவில்லை?
   a) ஆண்டுத்தொகை முறை - ஆண்டுத் தொகை அட்டவணை
   b) தேய்மானம் - நிலைச்சொத்தின் மதிப்பு அதிகரித்தல்
   c) கூடியுள்ள வருமானம் - பெற வேண்டிய வருமானம்
   d) மறுமதிப்பீட்டு முறை - விடு கருவிகள்
7. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விடக் குறைவாக இருந்தால் அது ஒரு ________ ஆகும்.
   a) நட்டம் b) மூலதன இலாபம் c) செலவு
8. ரூ.20,000 மீது ஆண்டிற்கு 10% குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் இரண்டாம் ஆண்டு இறுதியில் சொத்தின் ஏட்டு மதிப்பு ________. a) ரூ.14,580 b) ரூ.5,420 c) ரூ.16,200
9. தொடக்க சரக்கிருப்பு ரூ.10,000, கொள்முதல் ரூ.2,00,000 மற்றும் இறுதி சரக்கிருப்பு ரூ.5,000. விற்ற பொருள்களின் அடக்கவிலை________. a) ரூ.2,15,000 b) ரூ.2,05,000 c) ரூ.2,10,000
10. வங்கி மேல்வரைப் பற்று ________ பொறுப்புக்கு ஒரு உதாரணம். a) நடப்பு b) நீர்மை c) துல்லிய நீர்மை
11. திட்டப்பட்டியல் என்பது ________ காலத்திற்கான மதிப்பீடு ஆகும். a) நடப்பு / நிகழ் b) எதிர் c) கடந்த
12. நிலை முதல் முறையில், கூட்டாளிகளின் இலாப நட்டங்கள் அவர்களின் ________ கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது. a) எடுப்பு b) முதல் c) நடப்பு
13. சாதாரண இலாபத்தை விட சராசரி இலாபம் மிகுதிக்கு________ என்று பெயர்.
    a) மொத்த இலாபம் b) உயர் இலாபம் c) நிகர இலாபம்
14. புதிய கூட்டாளி சேர்க்கையில் ________ கணக்கிடப்படுகிறது.
    a) ஆதாய விகிதம் b) முதல் விகிதம் c) தியாக விகிதம்
15. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிக்கும் பொழுது, அது ________ இனமாகும்.
    a) இலாப b) நட்ட c) இலாபம் மற்றும் நட்டம்
16. வெளிச்செல்லும்கூட்டாளிக்குச்சேர வேண்டிய தொகை உடனே செலுத்தாவிட்டால் அத்தொகை மாற்றப்படும்கணக்கு
    a) முதல் கணக்கு b) ரொக்கம் கணக்கு c) கடன் கணக்கு
17. A,B, C ஆகிய கூட்டாளிகளின் இலாபப் பங்கு முறையே 2:3:1. 'B' கூட்டாண்மையிலிருந்து விலகினால் புதிய இலாபப் பகிர்வு விகிதம் ________. a) 3:2 b) 3:1 c) 2:1
18. ஒரு நிறுமத்தில் சாதாரண பங்குகளை வாங்குபவர் ________ என்று அழைக்கப்படுகிறார்.
    a) நிறுமத்தின் கூட்டாளி b) நிறுமத்தின் பங்குதாரர் c) நிறுமத்தின் கடனீந்தோர்
19. அட்டவணை 'A'-யின் படி அழைப்பு முன் பணத்திற்கு செலுத்திடும் வட்டி ________ ஆகும்.
    a) 6% b) 5% c) 4%
20. இரு அழைப்புகளுக்கிடையே இருக்க வேண்டிய கால இடைவெளி ________ ஆகும்.
    a) ஒரு வருடம் b) இரு மாதங்கள் c) ஒரு மாதம்

### பிரிவு - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: (21வது வினா கட்டாய வினா)** 7 x 2 = 14

21. மலர் மற்றும் இராணி முறையே ரூ.2,00,000 மற்றும் ரூ.1,00,000 விற்பனை மேற்கொண்டனர். மலர், வணிகத்தில் ரூ.50,000 இலாபம் ஈட்டினார். இராணி அவரது வணிகத்தில் ரூ.40,000 ஈட்டினார். யாருடைய வணிகம் இலாபகரமாக உள்ளது என்பதை விகித ஆய்வு அடிப்படையில் விளக்குக.
22. "பத்திர முனைமக் கணக்கு" இருப்புநிலைக்குறிப்பில் எப்பகத்தில் எந்த தலைப்பின் கீழ் காட்டப்பட வேண்டும்?
23. மாற்றுதல் முறை என்றால் என்ன?
24. கார்டர் அவர்களின் கூற்றுப்படி தேய்மானம் வரைவிலக்கணம் தருக.
25. ரொக்கப் பெறுதல்களுக்கு ஏதேனும் இரண்டு உதாரணம் தருக.
26. நற்பெயர் மதிப்பிடும் முறைகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.
27. எடுப்பு மீது வட்டி ரூ.5,000. சரிக்கட்டுப் பதிவு, மாற்றுப்பதிவு தருக.
28. நிகர இலாபம் ரூ.40,000. மொத்த விற்பனை ரூ.1,00,000. நிகர இலாப விகிதத்தைக் கணக்கிடுக.
29. கண்ணன் வரையறு நிறுமம் 50,000 பங்குகளை ரூ.100 முகமதிப்பில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவு தருக.
30. சுந்தர் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத தொடக்கத்திலும் ரூ.2,000 தொடர்ந்து எடுத்துக் கொள்கிறார். ஆண்டுக்கு 10% சுந்தரின் எடுப்பு மீதான வட்டியைக் கணக்கிடுக.

## பிரிவு - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: (31வது வினா கட்டாய வினா)** 7 x 3 = 21

31. 31.3.2007 அன்றைய இருப்பாய்வு கீழ்க்கண்ட விவரங்களைத் தருகிறது.

| | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| கடனாளி | 50,000 | — |
| வாராக் கடன் | 800 | — |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | — | 4,300 |

சரிக்கட்டுதல்:
கடனாளி மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
இவ்விவரம் 31.3.2017 இலாப-நட்டக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

32. தேய்மானம் ஏற்படுவதற்கான புறக் காரணங்களை விளக்குக.

33. புற-அக பொறுப்பு விகிதம் = 2 : 1
நீண்ட காலக் கடன் = ரூ.1,50,000
பங்குதாரர் நிதியைக் கணக்கிடவும்.

34. இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறிக:

| | | |
|---|---|---|
| தொடக்க முதல் | ரூ. | 1,60,000 |
| இறுதி முதல் | ரூ. | 1,80,000 |
| எடுப்பு | ரூ. | 36,000 |
| கூடுதல் முதல் | ரூ. | 10,000 |

35. பின்வரும் விவரங்களில் இருந்து ஜுன் 2017-க்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| கையில் ரொக்கம் (1.6.2017) | 10,000 |
| ரொக்கக் கொள்முதல் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,00,000 |
| வட்டி செலுத்தியது | 1,000 |

36. நற்பெயரின் மதிப்பை கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடுக.
கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் ஆண்டு | ரூ. | 10,000 | (நட்டம்) |
| இரண்டாம் ஆண்டு | ரூ. | 26,000 | (இலாபம்) |
| மூன்றாம் ஆண்டு | ரூ. | 34,000 | (இலாபம்) |
| நான்காம் ஆண்டு | ரூ. | 50,000 | (இலாபம்) |

37. சுதா, லதா என்ற கூட்டாளிகள் முறையே 4:3 என்னும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். கலா என்பவரை 3/7 கூட்டுக்குச் சேர்த்தனர். இப்பங்கு சுதா செய்யும் தியாகம் 2/7 மற்றும் லதா செய்யும் தியாகம் 1/7. புதிய இலாபப் பகிர்வு விகிதத்தைக் கணக்கிடுக.

38. நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

39. மனோ, மணி, மாறன் என்ற கூட்டாளிகள் 5:3:2 என்னும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 31.12.2016 அன்று நிறுவன ஏடுகளில் காப்பு நிதி ரூ.30,000, பகிர்ந்து தரா நட்டம் ரூ.20,000 உள்ளன. மாறன் 1.1.2017 அன்று விலகினார். காப்பு நிதி, பகிர்ந்து தரா நட்டம் ஆகியவற்றை பழைய கூட்டாளிகளின் கணக்குகளுக்கு மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

40. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் பங்கு ஒன்று ரூ.10 மதிப்புடைய 200 சாதாரண பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகையான ரூ.2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர்.
பங்கு ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவு தருக.

## பிரிவு - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 7 x 5 = 35

41. a) திரு.கண்ணன் 2010 ஏப்ரல் 1 அன்று ரூ.2,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கினார். மூன்று ஆண்டுகள் அவ்வியந்திரம் பயன்படுத்தப்பட்ட பிறகு ரூ.1,60,000 க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் தேய்மானம் 10%குறைந்து செல் இருப்பு முறையில் விலக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கணக்கேடுகள் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரம் கணக்கையும், தேய்மானம் கணக்கையும் தயார் செய்க.

*(அல்லது)*

b) 2014 ஏப்ரல் 1-ஆம் நாள் அன்பு, பாலன் என்னும் இருவர் முறையே ரூ.1,50,000, ரூ.1,00,000 முதலிட்டு சமமான விகிதத்தில் இலாப-நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். சரிக்கட்டுகளுக்கு முன் அந்நிறுவனத்தின் 2015 மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம் ரூ.60,000. முதல் மீது வட்டி 6% பாலனுக்கு ஆண்டு ஊதியம் ரூ.15,000 அனுமதிக்கப்படுகிறது. அந்த ஆண்டு அன்பு எடுத்த தொகை ரூ.15,000, பாலன் எடுத்த தொகை ரூ.10,000. அதற்கான வட்டி முறையே ரூ.500, ரூ.250 ஆகும். 2015 மார்ச் 31 அன்று உள்ளபடி கூட்டாளிகளின் இலாப நட்ட பகிர்வு கணக்கைத் தயாரிக்க.

42. a) 2014, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்கவும்.
i) மார்ச் மாதத்தில் தொடக்க இருப்பு ரூ.4,025
ii) ரொக்கக் கொள்முதல் மார்ச் ரூ.12,000; ஏப்ரல் ரூ.16,000
iii) ரொக்க விற்பனை மார்ச் ரூ.18,000; ஏப்ரல் ரூ.24,000
iv) சம்பளம் கொடுத்தது மார்ச் ரூ.5,000; ஏப்ரல் ரூ.5,000
v) ஏப்ரல் மாதத்தில் செலுத்த வேண்டிய கடன் ரூ.6,500

*(அல்லது)*

b) சங்கர், சலீம், சாலமன் என்ற கூட்டாளிகள் முறையே 3:2:1 என்னும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2015, ஏப்ரல் 1 அன்று சாலமன் கூட்டாண்மையை விட்டு விலகினார். சாலமன் விலகியதும் தேவையான சரிக்கட்டுதலுக்குப் பின் கூட்டாளிகளின் முதல் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

ப முதல் கணக்குகள் வ

| விவரம் | சங்கர் ரூ. | சலீம் ரூ. | சாலமன் ரூ. | விவரம் | சங்கர் ரூ. | சலீம் ரூ. | சாலமன் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| இலாப நட்ட க/கு | 15,000 | 10,000 | 5,000 | இருப்பு க/கு | 1,00,000 | 75,000 | 50,000 |
| இருப்பு க/கு | 1,00,000 | 75,000 | | நற்பெயர் க/கு | 9,000 | 6,000 | 3,000 |
| | | | | மறுமதிப்பீட்டு க/கு | 3,000 | 2,000 | 1,000 |
| | | | | பொதுக்காப்பு க/கு | 3,000 | 2,000 | 1,000 |
| | 1,15,000 | 85,000 | | | 1,15,000 | 85,000 | |

சாலமனுக்கு செலுத்த வேண்டிய தொகையினைக் கண்டறிந்து பின்வருவனவற்றிற்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக :

i) சேர வேண்டிய தொகையை உடனடியாக செலுத்தினால்

ii) சேர வேண்டிய தொகையை உடனடியாக செலுத்தாவிட்டால்

iii) ரூ.25,000 உடனடியாகவும், மீதித் தொகையை பிறகு செலுத்தினால்

43. a) கீழ்க்காணும் இருப்பாய்விலிருந்து திரு.முருகன் அவர்களின் 2013 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக்குறிப்பையும் தயார் செய்க.

இருப்பாய்வு

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| முதல் | | 1,20,000 |
| விற்பனை | | 75,000 |
| கொள்முதல் | 45,000 | |
| சம்பளம் | 6,000 | |
| வாடகை | 4,500 | |
| காப்பீட்டு முனைமம் | 900 | |
| எடுப்பு | 15,000 | |
| இயந்திரம் | 84,000 | |
| வங்கி | 13,500 | |
| ரொக்கம் | 13,500 | |
| சரக்கிருப்பு | 15,600 | |
| கடனாளிகள் | 7,500 | |
| கடனீந்தோர் | | 10,500 |
| | 2,05,500 | 2,05,500 |

சரிகட்டுதல்கள் :

i) 31.3.2013 அன்றைய சரக்கிருப்பு ரூ.14,700 ii) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.1,000 *(அல்லது)*

b) ஒரு நிறுத்தின் இயக்குநர்கள் உரிய அறிவிப்புக்கு பிறகு ரூ.3 இறுதி அழைப்புத் தொகை செலுத்தத் தவறிய ரூ.10 மதிப்புடைய 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். பின்னர் அப்பங்குகளை பங்கொன்றுக்கு ரூ.8 க்கு மறு வெளியீடு செய்தனர். குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

44. a) தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க.

| | ரூ. |
|---|---|
| தொடக்க கடனாளிகள் | 1,00,000 |
| தொடக்க கடனீந்தோர் | 65,000 |
| கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 5,90,000 |
| பெற்ற தள்ளுபடி | 3,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித்திருப்பம் | 10,000 |
| உள் திருப்பம் | 6,000 |
| இறுதி கடனாளி | 70,000 |
| இறுதி கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 |
| ரொக்கக் கொள்முதல் | 25,000 |

*(அல்லது)*

b) ராதா, அமுதா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 என்ற விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் குமுதா என்பவரை கூட்டாண்மையில் சேர்க்க முடிவு செய்து கீழ்க்காணும் சொத்துக்கள் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தனர்.

i) நிறுமத்திலுள்ள ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ரூ.18,000 தற்பொழுது பதிவு செய்தல் வேண்டும்.

ii) சரக்கிருப்பு, அறைகலன் மற்றும் இயந்திரம் மதிப்புகள் முறையே ரு.18,000. ரூ.6,000, ரூ.30,000 என குறைக்க வேண்டும்.

iii) தொழிலாளர்களுக்கு ஈட்டுத்தொகை ரூ.24,000 க்கு ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கைத் தயாரிக்கவும்.

45. a) விகிதங்களைக் கணக்கிடுக: i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம் iii) நடப்பு விகிதம்

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 3,00,000 |
| நிகர இலாபம் | 30,000 |
| நடப்பு பொறுப்புகள் | 30,000 |
| விற்ற பொருளின் அடக்கவிலை | 1,50,000 |
| நடப்பு சொத்துகள் | 60,000 |

(அல்லது)

b) ஒரு நிறுவனத்தின் ஆண்டுதோறும் எதிர்பார்க்கும் சராசரி நிகர இலாபம் ரூ.54,000. தொழிலில் பயன்படுத்தப்பட்டுள்ள சராசரி முதல் ரூ.3,00,000. தொழிலில் போட்டுள்ள முதல் மீது எதிர்பார்க்கும் வட்டி 10%. கூட்டாளிகளின் ஊதியம் ஆண்டுக்கு ரூ.9,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உயர் இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

46. a) திருமதி.மீனா ரூ.1,20,000 முதலுடன் 1.4.2003 அன்று தொழில் தொடங்கினார். அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 வீதம் தன் சொந்த செலவிற்கு எடுத்துக் கொண்டார். கூடுதல் முதல் ரூ.20,000 இட்டார். 31.3.2004 அன்றைய அவரது நிலை

| | ரூ. |
|---|---|
| வங்கி இருப்பு | 8,000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| கடனாளிகள் | 50,000 |
| அறைகலன் | 2,500 |
| கையிருப்பு ரொக்கம் | 2,000 |
| கடனீந்தோர் | 25,000 |
| கொடுபட வேண்டிய செலவு | 1,000 |

அவர்தனது கணக்குகளை ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2003-04 ஆம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

(அல்லது)

b) பின்வரும் 31.3.2015 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து நடப்பு விகிதம் மற்றும் நீர்மை விகிதத்தினைக் கணக்கிடுக.

31.3.2015 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| சாதாரண பங்கு முதல் | 40,000 | இயந்திரம் | 45,000 |
| இலாப-நட்ட கணக்கு | 4,000 | சரக்கிருப்பு | 22,000 |
| கடனீட்டுப் பத்திரம் | 25,000 | கடனாளி | 19,000 |
| கடனீந்தோர் | 24,000 | ரொக்கம் | 5,000 |
| | | முன்கூட்டிச் செலுத்திய செலவு | 2,000 |
| | 93,000 | | 93,000 |

47. a) திரு.முகமது அவர்களின் 31.3.2016 ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பில் இருந்து ஐந்து சரிக்கட்டு பதிவுகளைத் தருக.

*திரு.முகமது அவர்களின் 2016 மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு*

| பொறுப்புகள் | தொகை ரூ. | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| கடனீந்தோர் | | 48,000 | ரொக்கம் | | 60,000 |
| முதல் | 1,28,000 | | கடனாளிகள் | 62,000 | |
| (+) நிகர | 42,000 | 1,70,000 | (–) வாராக்கடன் | 2,000 | |
| | | | | 60,000 | |
| | | | (–) வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 3,000 | |
| | | | | 57,000 | |
| | | | (–) கடனாளி மீதான தள்ளுபடி ஒதுக்கு | 1,140 | 55,860 |
| | | | இயந்திரம் | 1,00,000 | |
| | | | (–) தேய்மானம் | 10,000 | 90,000 |
| | | | இறுதி சரக்கிருப்பு | | 12,140 |
| | | 2,18,000 | | | 2,18,000 |

(அல்லது)

b) ரவி வரையறு நிறுமம் ரூ.10 வீதம் 10,000 பங்குகளை வெளியிட்டது.

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ. 3 | ஒதுக்கீட்டின் போது | ரூ. 3 |
| முதல் அழைப்பின் போது | ரூ. 2 | இறுதி அழைப்பின் போது | ரூ. 2 |

90% பங்குகள் மட்டுமே பொதுமக்களால் ஒப்பப்பட்டன. பெற வேண்டிய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

******